**Minutes of the Public Hearing conducted for the M/s. G.Karuppanan Rough Stone Quarry at S.F.No. 477/1 Chokkalingapuram Village, Melur Taluk, Madurai District held on 14.06.2023 at 11AM at M/s. M.N.P. Tirumana Mahal, Trichy Main Road, Pattamangalampatti Vilakku, Karungalakudi, Melur Taluk, Madurai District.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Dr.K.Firthouse Fathima | : | Revenue Divisional Officer<br>Melur,<br>Madurai District |
| 2 | Dr.R.Gunasekaran | : | District Environmental Engineer<br>TamilNadu Pollution Control Board<br>Madurai District |
| 3 | Tmt.G.Usha Rani | : | Assistant Engineer<br>TamilNadu Pollution Control Board<br>Madurai District |
| 4 | Tmt.M.Devakirubai | : | Assistant Engineer<br>TamilNadu Pollution Control Board<br>Madurai District |
| 5 | Project Proponent and public | : | As per Attendance Register<br>(Copy of Register is enclosed) |

**District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Madurai**

The District Environmental Engineer, TamilNadu Pollution Control Board, Madurai has welcomed the Revenue Divisional Officer, Melur. He has

welcomed the Government officials, general public, press reporter, project consultant, industries owner and all those who have come to attend the public hearing meeting. He has mentioned that the details on public hearing meeting have already been published in "Dinathanti" and "The Indian Express" on 11/05/2023. As per the EIA Notification, Ministry of Environment and Forests and Climate Change, New Delhi, 14/09/2006, it is necessary to hold public hearing meeting before granting Environmental Clearance for the unit M/s.G.Karuppanan, 2.70.0 ha, Plot No.471/1, Chokkalingapuram Village, Melur Taluk, Madurai District which has proposed to establish and operate. This public hearing meeting is held today for quarrying normal rough stone.

He told that the project executive summary and EIA reports pertaining to these projects are made available at the required places for public in Tamil and English. He asked them to express their views on this rough stone quarry project in oral and also in writing.

He requested the Revenue Divisional Officer, Melur to preside over the meeting.

**Revenue Divisional Officer, Melur**

She asked the project consultant to explain about the project.

**Technical Description by Environmental Consultant**

Environmental Consultant for M/s. G. Karuppanan gave a presentation on this normal stone quarry project.

31

**1.Mr. Kathiresan, Kadampatti :**

He asked how far the approved residential areas in Kadambatti area located from the quarry? How far from Ayyapatti village? The map does not indicate the number of culverts and streams of the Public Works Department and how far from the quarry. He said that permission should be given after looking at the settlements and water bodies around the quarry. It should be 1km between quarries and villages.

**Revenue Divisional Officer, Melur, Madurai**

She said that they will check how many houses and water bodies are located around the quarry.

**2.Mr. Netaji, State Deputy General Secretary, Tamil Nadu Agriculture Protection Association, Madurai:**

There is a stream in the middle of the quarry that was not mentioned in the document. The stream is in the middle. There is a house/residence at a distance of 300 meters and no permission should be given for quarrying. Out of 40 documents only 10 documents are in the project. There may be 5-6 ponds in the area. If the farmers did not get enough irrigation from the rain water, they depend on the ground water. When the normal stone is removed, the ground water level decreases below 60 feet. The normal stones should not be cut . There is Malampatti mud path which is not shown in FMB. Water reservoirs are within 500 meters. R.S.No. 471/2 have bodies of water. Stone quarrying is not useful for people. There are various plans for road construction in the town. He therefore said that permission should not be granted for quarrying.

**Revenue Divisional Officer, Melur, Madurai**

She said that they are registering their comments.

**3.Mr. Velmurugan, Chokkalingapuram:**

In the downstream of the quarry, agricultural land is located. The quarry owner should not block the water coming from the aquifer. All Government Schemes should be provided in our town. Basic facilities should be provided to our town. The road should not be damaged. When a pit is formed due to quarrying, permission should be given to release the water for agricultural use. In and around there are 23 villages having stone breakers and agricultural labourers they may be benedictory due to this project. So, they welcome the stone quarrying industry. 5000 people are benefit to live through this project. Therefore, he requested to give permission to operate quarries as much as possible.

**4. Mr. Thiagarajan Social Worker, Chokkalingapuram**:

For normal stone quarry project, Mr. Karuppan informed to take part in this meeting. Stone quarry has been going on for years. This stone quarry does not cause any disturbance to the people living there and the nearby farmers. Mr.Karuppanan requested that the quarry should be operated in accordance with the Government guidelines without disturbing the farmers so as not to affect the water levels.

**5.Mr. Manikandan, Kadampatti:**

My house is on the Kalquari side. The stone quarry has been in operation for 50 years. Our village is not affected by this quarry. Livelihood of 1000's of villagers, not only our town nearby villagers also benefit. So, he asked

for a license for the quarry.

**6. Mr. Karnan, Baranmalai Safety Iyakkam:**

There is a stream and carriageway in quarry. A distance of 10 meters gap on both sides should be fenced but it was not fenced. 30 documents were not submitted in the Environmental Impact Assessment Report. Documents not submitted. Quarry can be understood only after submission of documents. There is a temple and houses at a distance of 300 meters. There is a pond at a distance of 500 meters. Illegal quarrying should not be allowed. The Kalquari near Kudumbayan Hill was cancelled after the permission was granted, because there was an explosion and a crack on Kudumbayan Hill. Here is the Samanar basin. So explosives should not be used. He said there are illegal violations of rules in this quarry project.

**7. Mr. Sasikumar,Chokkalingapuram:**

I have come here after knowing the information about setting up a stone quarry in Chokkalingapuram village. Quarry is an underground tank and should not break it. He requested to stop this project. He insisted not to grant permission for the quarry.

**8. Mr. Ravichandran, Aritapatti Seven Hill Conservation Society Secretary:**

Quarries must obtain permission from all fields. Hon'ble Chief Minister announced on Environment Day mentioning that one lakh Kurunkadugal should be set up. We need land to set up a small garden. We have to see how many water bodies, how many houses and roads are there on the side. R.S.No.471/2 has a watershed. The Government has announced that water tables should be conserved

and trees should be planted more to control global warming.

If so many people are benefited by a gun factory, can we permit to allow the gun factory to be set up? Can the Government give permission for it? Birds, animals, biodiversity should be studied if they are fit to live. There should no water bodies within 50 meters. Please tell me if there is any legal Act to allow water bodies within 50 meters near the quarry. There are dense forests, farmlands, streams. Properly set up birds, animals and biodiversity should be protected. Inspect the site directly and give permission for quarrying.

There are houses at a distance of 50 to 100 meters from the quarry. They said there was a new invention for detonating explosives and a device for controlling dust. First you have to do it and then give permission. There is no general public due to the quarry near Othakadai Tamaraipatti. It should be seen that there are houses, birds, biodiversity and agricultural land near the quarry. The aquatic life depends on the water levels and streams of Alagharkoil hills. So, he requested not to give permission for quarrying.

**9. Mr. Sevuga Perumal, Karungalakudi:**

10000 families live in Karungalakudi since there are 10 quarries. Children cannot be educated without a quarry in Kadambatti. The quarries have been around since that time. They depend on that quarry which will employ 300 people. We don't know whether to live or die. We need stone quarry for our livelihood

**10. Mr. Amanullah, Chokkalingapuram :**

The previously spoken people mentioned that there is a stream in that

rock, dense forest and a Samanar basin. There is nothing like that there is only rock. He said that if this quarry starts, the lands where 300 families will live and they have to cooperate with it. 500 people are unemployed in the village.

**11. Mrs. Megharaj Begum, President of Chokkalingapuram Panchayat Council:**

There is no job opportunity for our people and youth. We have to do some project work for the people. She requested to allow this stone quarry to come up in their village.

**12. Mr. Vetri Selvan, Ex. President of Chokkalingapuram Panchayat Council:**

There is no harm to us, because the quarry is coming to benefit the people. My land is near the quarry. I am not harmed. So, he asked to allow the quarry and develop their area.

**Revenue Divisional Officer, Melur**

A lot of people have commented on setting up the quarry. Some people said that they should not allow the quarry and some people said that it should be allowed. She said that they will review it, after examining it once, they would investigate further and submit the report to the committee.

**13. Mr. Yasia Khan, Chokkalingapuram Union Councillor:**

Already quarrying is going on near Karuppanan Quarry for the last 50 years at Thambattaparai village from Kadambatti village. Private quarrying is also going on near it. Quarrying is only good, not bad. Quarrying is already underway. Then the impact will not come now, as the quarry is coming, the Chokkalingapuram Village

Panchayat will get many projects through its income. Income will increase for the village. Without a quarry, people will be in trouble. So, he requested that permission should be given to the quarry.

**14. Mr. Selvaraj, Kampur:**

They have been doing good works for people for 10 years. They have received various awards.

There is a quarrying violations at an area 02.70.0 heaters on Government Land by the M/s. Karuppanan Rough Stone Quarryat S.F.No.471/1, Chockkalingapuram Village, Melur Taluk, Madurai District.

According to Section 36 (1) of Houses, Housing Estates Permanent Structures of Minor Mineral Development Rules, 1959, approved houses, housing estates approved by Panchayat and DTCP/permanent constructions like natham purampokku, temple, government compound houses, green houses shall be quarried only at a distance of 300 meters if any. The work to be done is clearly stated.

Chokkalingapuram village, about 100 meters west of survey No. 471/1 where Karuppanan stone quarry is located, there is a village consist of fifty houses called Tambatta parai. The project cannot be given permission as the town is within a radius of 300 meters from the outcrop of stone quarry. Permission to the project should not be given.

In Chokkalingapuram Village, Karuppanan stone quarry is located around survey no.471/1, within 300 meters from the outer sprout area of stone quarry, there are various Government approved houses, green houses and plots

including green houses in East, West and South.

Also, at a distance of 280 meters on the north-west side of the Chokkalingapuram, there is a permanent construction Ayyanar Temple at Ayyapatti Village at survey No.50.

This is clearly shown in field map and in the village map.

Therefore, Section 36 (1) of the Minor Mineral Concession Rules, 1959 clearly states that quarrying should be carried out at a distance of 300 meters (about 1000 feet) from the outer edge of the quarry. Chookkalingapuram Karuppanan stone quarry is not allowed as per law. Hence, he requested not to give permission.

Survey No. 471/1, having an area of about 7 acres is located in the middle of the M/s. Karuppanan quarry as Vandipathai in Chokkalingapuram Village.

At 12 feet in the middle of the field, where this stone quarry is situated, there is a cart path leading to Malampatti. The cart path is clearly shown on the field map and village map. (Tamil Environmental Assessment Summary Page 17)

If there is a carriageway, the stone quarry should operate with a 35-foot (10-meter) clearance on either side of the carriageway. But the Environmental Impact Assessment Report has been given to hide the existence of this route.

Section 36(1) of Minor Mineral Concession Rules 1959, the Government rule clearly states that quarrying should be carried out at a distance of 50 meters from streams and drains.

But, no official documents show that there is a stream in Karuppanan

stone quarry on the south side of survey no.471/1 itself.

There are various Court orders, ordering that quarries should not be set up within 500 meters around stone quarry, if there are many ponds (water bodies) Government water bodies, lakes, ponds, canals, dams with stagnant water bodies.

Also, mentioned in State Environment Impact Assessment Authority Reference Letter No. Lr.no.SEIAA/TN/ F.No.9381/SEAC/TOR-1306/2022 Dated. 28/11/2022.

But, according to the report (Tamil Summary Report Page 2) Air, Noise Water, Soil Biodiversity Survey was conducted from March 1/2022 to May 31/2022 based on reference norms.

It is a huge fraud that the terms of reference was given on 28/11/2022 and the study was done 8 months earlier.

At Karuppanan Stone Quarry survey No. 471/1, Government land is situated in Chokkalingapuram Village, Melur Taluk, Madurai District seeking permission for Karuppanan Stone Quarry at an area of 02.70.0 hectares in the hearing held on 14/06/2023 Wednesday. Out of 40 types of documents to be attached, they attached only 10 documents.

30 types of documents required to be attached with the EIA report for this quarry was not attached. Due to this, there is no opportunity to know the complete details and to comment regarding this project.

Although all the documents have been given to the Department of Mines and Geology and the State Environmental Impact Assessment Authority, the public hearing has to be cancelled as it has not submitted the Annexure along wih

the Environmental Impact Assessment Report.

Kottampatti is a drought region due to the abundance of quarries. There are many programs available for people to use, to give good earth place to the future generation. Therefore, permission should not be given for quarrying

**Revenue Divisional Officer, Melur,**

Since, no one has come forward to comment on this project, she mentioned that no permission has been given to this project and this public hearing meeting is being held before the issue of Environmental Clearance and any violations of the rules will be taken into consideration.

She concluded the meeting by thanking everyone

The meeting came to an end.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Madurai

Revenue Divisional Officer
Melur
Madurai District

**Enclosures:**

1. Copy of press release (Public Notice Published in Tamil & English) for notifying the public hearing meeting.
2. Copy of attendance sheet of the public hearing, (Total pages 12 & 91 persons)
3. Copy of Audio & Video (DVD - Disc) of the public hearing proceedings.
4. Copy of petition received from the public.

**மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், சொக்கலிங்கபுரம் கிராமம், புலஎண்.471/1, தி/ள்.ஜி.கருப்பணன் சாதாரண கற்கள் குவாரி திட்ட பணிகளுக்கு பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் 14/06/2023 அன்று காலை 11.00 மணியளவில் தி/ள்.எம்.என்.பி திருமண மகால், திருச்சி மெயின் ரோடு, பட்டமங்கலம்பட்டி விலக்கு, கருங்காலக்குடி, மேலூர் வட்டம், மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை விபரங்கள்.**

<u>பங்கேற்றோர்</u>

| | | |
|---|---|---|
| 1. | மரு. கே. ஃபிர்த்ஹவுஸ் பாத்திமா | வருவாய் கோட்டாட்சியர்,<br>மேலூர்,<br>மதுரை மாவட்டம் |
| 2. | முனைவர்.இரா. குணசேகரன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>மதுரை மாவட்டம். |
| 3. | திருமதி.கோ. உஷா ராணி | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>மதுரை மாவட்டம். |
| 4. | திருமதி.மா.தேவகிருபை | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>மதுரை மாவட்டம். |
| 5. | தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் | வருகை பதிவேட்டில் உள்ளபடி<br>(வருகை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது) |

**<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மதுரை</u>**

பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்திட வருகை புரிந்திருக்கும் மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர், மதுரை அவர்களுக்கு என் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு கலந்து கொள்ள வருகை தந்திருக்கும் அரசு அலுவலர்கள், பொது மக்கள், பத்திரிக்கை நண்பர்கள், திட்ட ஆலோசகர், தொழிற்சாலை உரிமையாளர் மற்றும் இக்கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மதுரை அவர்கள் வரவேற்றார்.

பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே "தினத்தந்தி" மற்றும் "தி இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 11/05/2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகம், புது தில்லி அவர்களால் 14.09.2006 அன்று வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு முன் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடைபெற வேண்டியது அவசியமானது என்பதால் தி/ள். ஜி.கருப்பணன், 2.70.0 ஹெக்டேர், புல எண்.471/1, சொக்கலிங்கபுரம் கிராமம், மேலூர் வட்டம், மதுரை மாவட்டத்தில் நிறுவிடவும், இயக்கிடவும் உத்தேசித்துள்ளது. சாதாரண கற்கள் எடுப்பதற்கு பொது மக்கள் கருத்து கேட்புணர்வு கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

மேலும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட இடங்களில் இத்திட்டங்கள் பற்றிய திட்ட விளக்க உரைகள் மற்றும் செயல் திட்ட சுருக்க அறிக்கைகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது. இக்குவாரி திட்டம் குறித்து தங்களது கருத்துகளை அமைதியான முறையில் தெரியப்படுத்தலாம் என்றும், எழுத்து மூலமாகவும் தெரியப்படுத்தலாம் என்றும் கேட்டுக் கொண்டார்.

மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர், மதுரை அவர்கள் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்தித் தரும்படிகேட்டுக் கொண்டார்.

<u>வருவாய் கோட்டாட்சியர், மேலூர்</u>

தி/ள். ஜி.கருப்பணன் சாதாரண கற்கள் குவாரிக்கு பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வந்திருக்கும் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்தார்.

திட்ட ஆலோசகரை திட்டத்தை பற்றி விளக்கவுரை ஆற்ற கேட்டுக் கொண்டார்

<u>தொழில் நுட்ப விளக்கம், சுற்றுச்சூழல் ஆலோசகர்</u>

சுற்றுச்சூழல் ஆலோசகர் தி/ள். ஜி.கருப்பணன் சாதாரண கற்கள் குவாரி திட்டங்கள் தொடர்பாக விளக்கவுரையை எடுத்துரைத்தார்.

<u>1.திரு. கதிரேசன், காடம்பட்டி :</u>

குவாரியை சுற்றி காடம்பட்டி பகுதியில் அங்கிகரிக்கப்பட்ட குடியிருப்பு பகுதிகள் எவ்வளவு தூரத்தில் எத்தனை இருக்கிறது. அய்யாபட்டி கிராமம் எத்தனை தூரத்தில் இருக்கிறது. பொதுபணித்துறையின் கண்மாய்கள்,

ஓடைகள் எத்தனை இருக்கிறது எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்று வரைப்படத்தில் குறிப்பிடப்படவில்லை. குவாரியை சுற்றி குடியிருப்புகள், நீர்நிலைகள் எத்தனை உள்ளது, எவ்வளவு தூரத்தில் உள்ளது என்று பார்த்து அனுமதி வழங்க வேண்டும் என்று கூறினார். இரண்டு குவாரிகளுக்கு இடையே 1கி.மீ இருக்க வேண்டும், கிராமங்கள் இவ்வளவு தூரத்தில் இருக்க வேண்டும்.

**வருவாய் கோட்டாட்சியர், மேலூர்**

குவாரியை சுற்றி எத்தனை வீடுகள், நீர்நிலைகள் உள்ளது என நாங்கள் சரி பார்க்கிறோம் என்று கூறினார்.

**2.திரு. நேதாஜி, தமிழக விவசாய பாதுகாப்பு சங்கம், மாநில துணை பொது செயலாளர், மதுரை :**

குவாரிக்கு நடுவில் ஓடை இருக்கிறது. ஆவணத்தில் காட்டவில்லை. ஓடை நடுவில் உள்ளது. 300 மீட்டர் தூரத்தில் வீடு இருக்கிறது குவாரிக்கு அனுமதி அளிக்கக்கூடாது. 40 ஆவணங்களில் 10 ஆவணங்கள் மட்டும் திட்டத்தில் உள்ளது, குளங்கள் 5,6 உள்ளது. வானம் பார்த்த பூமி, மழை பெய்தால் தான் தண்ணீர். நிலத்தடி நீரை நம்பி தான் விவசாயிகள் இருக்கிறோம். 60 அடிக்கு கீழ் கல் எடுக்கும் பொழுது நிலத்திடி நீர் குறையும். மழைநீரை சேமிக்கும் டேங்க் தான் கற்கள், அதனை வெட்டி எடுக்கக்கூடாது. பூமி வெப்பமடையும், நீர்மட்டம் குறையும். மலம்பட்டி வண்டிப்பாதை இருக்கிறது, அதனை FMBல் காட்டவில்லை. நீர் தேக்க தொட்டிகள் 500மீட்டருக்கு உள்ளேயே இருக்கிறது. குளங்கள் 471/2ல் நீர்நிலைகள் இருக்கிறது. கல் குவாரி வருவதால் மக்களுக்கு பயன்படாது. ஊருக்கு ரோடு போடுவதற்கு பல்வேறு திட்டங்கள் உள்ளது. எனவே குவாரிக்கு அனுமதி வழங்கக்கூடாது என்று கூறினார்.

<u>வருவாய் கோட்டாட்சியர், மேலூர்</u>

நாங்கள் பதிவு செய்துக் கொள்கிறோம் என்று கூறினார்.

<u>3.திரு. வேல்முருகன், சொக்கலிங்கபுரம்:</u>

குவாரிக்கு கீழ்பகுதியில் விவசாய நிலம் உள்ளது. குவாரி உரிமையாளர் நீர்நிலைக்கு வரும் தண்ணீரை தடுக்கக்கூடாது. அரசின் நிதி எங்கள் ஊருக்கு வர வேண்டும். எங்கள் ஊருக்கு அடிப்படை வசதிகள் செய்து தரவேண்டும். ரோடு பாதிப்பு அடையக் கூடாது. குவாரி பணியால் பள்ளம் ஏற்படும் பொழுது தண்ணீரை விவசாயத்திற்கு பயன்படுமாறு வெளியேற்ற அனுமதி கொடுக்க வேண்டும். 23 கிராமங்களில் கல் உடைப்பு தொழிலாளர்கள், விவசாய தொழிலாளர்கள் இருக்கிறார்கள். கல் உடைப்பு தொழிலை வரவேற்கிறோம். இத்திட்டத்தினால் 5000 பேர் வாழ வாய்ப்பு இருக்கிறது. எனவே கூடிய விரைவில் கல்குவாரிகள் இயக்க அனுமதி கொடுக்க கேட்டுக் கொண்டார்.

<u>4.திரு. தியாகராஜன் சமூக ஆர்வலர், சொக்கலிங்கபுரம்:</u>

சாதாரண கல்குவாரி திட்டத்திற்கு திரு. கருப்பணன் கருத்து கேட்பு கூட்டத்திற்கு எங்களுக்கு தகவல் வந்ததின் அடிப்படையில் விவசாயிகள் இங்கே வந்துள்ளோம். கல்குவாரி காலம் காலமாக நடந்து வருகிறது. இந்த கல் குவாரியால் அங்கு குடியிருக்கும் மக்களுக்கும், அருகில் உள்ள விவசாயிகளுக்கும் எந்த ஒரு இடையூறும் கிடையாது. நீர் நிலைகளை பாதிக்காத வண்ணம் விவசாயிகளுக்கு இடையூறின்றி அரசு வழிகாட்டுதல்களுடன் கருப்பணன் கல் குவாரி செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**5.திரு. மணிகண்டன், காடம்பட்டி:**

கல்குவாரி பக்கத்தில் தான் என் வீடு இருக்கிறது. 50 வருடமாக கல் குவாரி நடந்து கொண்டு தான் இருக்கிறது. இந்த குவாரியால் எங்கள் கிராமத்திற்கு பாதிப்பு இல்லை. கிராம மக்கள் 1000 பேரின் வாழ்வதாரம், எங்கள் ஊர் இல்லாமல் அருகில் உள்ள கிராம மக்கள் பயன் அடைகிறார்கள். அதனால் குவாரிக்கு உரிமம் வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

**6.திரு. கர்ணன், பரன்மலை பாதுகாப்பு இயக்கம்:**

கல்குவாரியில் ஓடை, வண்டிப்பாதை இருக்கிறது. இருபுறமும் 10 மீட்டர் இடைவெளி விட்டு தான் அமைக்கப்பட வேண்டும் அவ்வாறு அமைக்கப்படவில்லை. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் 30 ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆவணங்கள் சமர்ப்பித்தால் தான் குவாரியை புரிந்து கொள்ள முடியும். 300 மீட்டர் தூரத்தில் கோவில், வீடுகள் இருக்கிறது. 500 மீட்டர் தூரத்தில் குளங்கள் இருக்கிறது. சட்ட விரோத கல்குவாரி என்று அனுமதி வழங்கக்கூடாது. குடும்பியான் மலை அருகில் உள்ள கல்குவாரி அனுமதி வழங்கிய பின் ரத்து செய்யப்பட்டது. ஏனென்றால் வெடி வெடித்து குடும்பியான் மலை மீது விரிசல் ஏற்பட்டது. இங்கு சமணர் படுகை உள்ளது. வெடி பயன்படுத்தக் கூடாது. இந்த கல்குவாரியில் சட்ட விரோத விதிமீறல்கள் உள்ளது என கூறினார்.

**7.திரு. சசிக்குமார் சொக்கலிங்கபுரம்:**

சொக்கலிங்கபுரம் கிராமத்தில் கல் குவாரி அமைப்பது குறித்த தகவல்கள் அறிந்து இங்கு வந்துள்ளேன். கல்குவாரி under ground tank அதை உடைக்க கூடாது. இதை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டார். குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

**8.திரு. ரவிச்சந்திரன், அரிட்டாபட்டி ஏழுமலை பாதுகாப்பு சங்க செயலாளர்:**

கல்குவாரிகள் எல்லா துறையிலும் அனுமதி வாங்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் ஒரு லட்சம் குறுங்காடுகள் அமைக்க வேண்டும் என்று சுற்றுச்சூழல் தினத்தில் அறிவித்துள்ளார். குறுங்காடு அமைக்க நிலங்கள் வேண்டும். பக்கத்தில் எத்தனை நீர்நிலைகள், எத்தனை வீடுகள், பாதைகள் இருக்கிறது என்று பார்க்க வேண்டும். 471/2ல் நீர்நிலை உள்ளது. பூமி வெப்பமயமாவதை கட்டுப்படுத்துவதற்கு நீர் நிலைகளை பாதுகாக்க வேண்டும் மற்றும் மரங்கள் அதிகமாக வைக்க வேண்டும் என்று அரசு அறிவித்துள்ளது.

துப்பாக்கி தொழிற்சாலையால் பலபேர் பயன்அடைகிறார்கள் என்றால் துப்பாக்கி தொழிற்சாலை அமைக்க அனுமதிக்க முடியுமா? அதற்கு அரசு அனுமதி தர முடியுமா. பறவைகள், விலங்குகள், பல்லுயிர் வாழ தகுதியானதா என ஆய்வு பண்ண வேண்டும். குவாரிக்கு அருகில் 50 மீட்டர்ல நீர்லைகள் இருந்தால் அனுமதிக்க சட்ட ரீதியாக ஏதாவது Act இருந்தால் சொல்லுங்கள். அடர்ந்த காடுகள், விவசாய நிலங்கள், ஓடை உள்ளன. முறைப்படி அமைக்கனும், பறவைகள், விலங்குகள், பல்லுயிர்களை பாதுகாக்க வேண்டும். இடத்தை நேரடியாக ஆய்வு செய்து குவாரிக்கு அனுமதி கொடுங்கள்.

குவாரி 50 முதல் 100 மீட்டர் தூரத்தில் வீடுகள் இருக்கிறது. வெடிகள் வெடிக்க புதிய கண்டுபிடிப்பு உள்ளதாகவும் தூசி கட்டுப்படுத்த கருவி இருப்பதாகவும் கூறினார்கள். முதலில் அதை செய்து விட்டு அனுமதி கொடுக்க வேண்டும். ஒத்தக்கடை தாமரைப்பட்டி அருகில் எத்தனை பொது மக்கள் வீடுகள், பறவைகள், பல்லுயிர்கள் கண்மாய், விவசாய நிலம் இருக்கிறது என்று பார்க்க வேண்டும். அழகர்கோவில் மலையின் நீர்

நிலைகள், ஓடைகளை சார்ந்து தான் பல்லுயிர்கள் வாழ்கின்றன. குவாரிக்கு தயவுச்செய்து அனுமதி வழங்கக்கூடாது.

**9.திரு. சேவுகப் பெருமாள், கருங்காலக்குடி:**

கருங்காலகுடியில் கல்குவாரிகள் 10 இருப்பதால் 10000 குடும்பங்கள் வாழ்கிறது. காடம்பட்டியில் குவாரி இல்லாமல் பிள்ளைகளை படிக்க வைக்க முடியாது. கல்குவாரிகள் அந்த காலத்தில் இருந்து இருக்கிறது. வேறு வேலை இல்லை. குவாரியால் 300 பேர் வேலை பார்ப்போம். நாங்கள் வாழ்வதா சாவதா என்று தெரியவில்லை. எங்கள் வாழ்வாதரத்திற்கு கல் குவாரி வேண்டும்

**10.திரு. அமானுல்லா, சொக்கலிங்கபுரம் :**

முதலில் பேசியவர்கள் அந்த பாறையில் ஓடை பாதை இருக்கிறது, அடர்ந்த காடு இருக்கிறது, சமணர் படுகை இருக்கு என்று சொன்னார்கள். அப்படி ஒன்றும் இல்லை, அங்கு வெறும் பாறை மட்டும் தான் இருக்கிறது. இந்த குவாரி ஆரம்பித்தால் 300 குடும்பங்கள் வாழும் நீங்கள் அதற்கு ஒத்துழைப்பு தர வேண்டும் கிராமத்தில் வேலை இல்லாமல் 500 பேர் உள்ளனர் என்று கூறினார்.

**11.திருமதி. மெகராஜ் பேகம், ஊராட்சி மன்ற தலைவர், சொக்கலிங்கபுரம் :**

எங்க ஊர் மக்கள் மற்றும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. நாங்கள் மக்களுக்கு திட்ட பணிகள் ஏதாவது செய்ய வேண்டும். எங்கள் ஊருக்கு இந்த கல் குவாரி வர அனுமதிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

**12.திரு. வெற்றி செல்வன், Ex. ஊராட்சி மன்ற தலைவர், சொக்கலிங்கபுரம் :**

குவாரி வருவதால் மக்களுக்கு பயன்தான் எங்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. குவாரிக்கு அருகில் தான் என்னுடை நிலம் இருக்கிறது. அதனால் எனக்கு எந்த பாதிப்பும் வரவில்லை. எனவே குவாரியை அனுமதித்து எங்கள் பகுதியை வளர்ச்சி செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

**வருவாய் கோட்டாட்சியர், மேலூர்**

குவாரி அமைப்பதற்கு நிறைய பேர் கருத்து சொல்லியிருக்கிறார்கள், ஒரு சிலர் குவாரிக்கு அனுமதிக்க கூடாது என்றும், அனுமதிக்கலாம் என்றும் கூறியிருக்கிறார்கள். ஒருமுறை ஆய்வு செய்துவிட்டு பரிசீலனை பண்ணுவதாக கூறினார். மேலும் ஆய்வு செய்து கமிட்டிக்கு அறிக்கை தருவதாக கூறினார்.

**13.திரு. யாசியாகான், சொக்கலிங்கபுரம் ஒன்றிய கவுன்சிலர்:**

கருப்பணன் குவாரிக்கு அருகில் 50 வருடமாக காடம்பட்டி கிராமத்திலிருந்து தம்பட்டபாறை என்ற இடத்தில் குவாரி நடந்து வருகிறது. அதற்கு அருகில் தனியார் குவாரியும் நடந்து வருகிறது.குவாரியால் நன்மை மட்டும் தான், தீமை இல்லை. ஏற்கனவே குவாரி நடந்து கொண்டு தான் இருக்கிறது. அப்பொழுது வராத பாதிப்பு, இப்பொழுது வராது. குவாரி வருவதால் அதன் வருமானம் மூலம் சொக்கலிங்கபுர கிராம பஞ்சாயத்திற்கு பல திட்டங்கள் கிடைக்கும். கிராமத்திற்கு வருவாய் பெருகும். குவாரி இல்லாமல் மக்கள் கஷ்டத்தில் இருக்கிறார்கள். எனவே குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டும் என கூறினார்.

**வருவாய் கோட்டாட்சியர், மேலூர்**

புதிதாக ஏதாவது கருத்துகள் இருந்தால் கூறுங்கள்.

14.திரு. செல்வராஜ், கம்பூர்:

மக்களுக்கு பல்வேறு பணிகள் 10 வருடமாக செய்து வருகிறோம். பல்வேறு விருதுகள் வாங்கியுள்ளோம்.

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், சொக்கலிங்கபுரம் கிராமம், கருப்பணன் கல்குவாரி புல எண்கள்,471/1, அரசு நிலத்தில் 02.70.0.ஹெக்டேர் பரப்பளவுக்கன குவாரியில் விதிமீறல்கள்.

வீடுகள், வீட்டு மனைகள் நிரந்தர கட்டுமானங்கள் சிறு கனிம சலுகை விதிகள் 1959 பிரிவு 36 (1) அடிப்படையில், அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் ஊராட்சி மற்றும் டிடிசிபி/ஆல் அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகள், ஊர் நத்தம், கோயில் போன்ற நிரந்தர கட்டுமானங்கள், அரசின் தொகுப்பு வீடுகள், பசுமை வீடுகள் இருந்தால் 300 மீட்டர் இடைவெளி விட்டு மட்டுமே குவாரிப் பணி செய்ய வேண்டும் என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சொக்கலிங்கபுரம் கிராமம், கருப்பணன் கல் குவாரி அமைய இருக்கும் புல எண்.471/1ல் மேற்குப் புறப்பகுதியில் சுமார் 100 மீட்டர் தூரத்தில் தம்பட்ட பாறை என்ற ஐம்பது வீடுகள் கொண்ட கிராமமே உள்ளது. இது கல்குவாரியின் வெளி முனைப்பகுதியில் இருந்து 300 மீட்டர் சுற்றளவில் ஊரே உள்ளதால் அனுமதி தர முடியாது. தரக்கூடாது.

சொக்கலிங்கபுரம் கிராமம் கருப்பணன் கல்குவாரி அமைய இருக்கும் புல எண்.471/1அய் சுற்றி, கல்குவாரியின் வெளி முனைப் பகுதியில் இருந்து 300 மீட்டர் சுற்றளவில், கிழக்கு மேற்கு, தெற்கு என பசுமை வீடுகள் உட்பட பல்வேறு அங்கீகரிக்கப்பட்ட வீடுகளும், வீட்டு மனைகளும் பல புலங்களில் உள்ளன.

25

மேலும் சொக்கலிங்கபுரம் கருப்பணன் குவாரியின் வடமேற்குப் புறத்தில் 280 மீட்டர் தூரத்தில், அய்யாப்பட்டி கிராமம் புல எண்.50ல் நிரந்தரக் கட்டுமான அய்யனார் கோயில் உள்ளது.

இது புல வரைபடம், கிராம வரைபடம் ஆகியவற்றில் தெளிவாக காட்டப்பட்டுள்ளது.

குவாரியின் நடுப்பகுதியில் வண்டிபாதை சொக்கலிங்கபுரம் கிராம் கருப்பணன் கல்குவாரி அமைய இருக்கும் புல எண்.471/1, சுமார் 7 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இந்த கல்குவாரி அமைய இருக்கும் புலத்திலேயே நடுப்புறம் பகுதியில் 12 அடியில், மலம்பட்டி செல்வதற்கான வண்டி பாதையாக உள்ளது. வண்டிப் பாதை செல்வதை புல வரைபடம், கிராம வரைபடம் ஆகியவற்றில் தெளிவாக காட்டப்பட்டு உள்ளது. (தமிழ் சுற்றுச்சூழல் மதிப்பீட்டு சுருக்கறிக்கை பக்கம் 17)

வண்டிப்பாதை இருந்தால், பாதைக்கு இருபுறமும் 35 அடி (10 மீட்டர்) இடைவெளி விட்டு தான் கல்குவாரி செயல்பட வேண்டும். ஆனால் இந்தப் பாதை இருப்பதை மறைத்துத் தான் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

குவாரிக்குள் ஓடை சிறு கனிம சலுகை விதிகள் 1959 பிரிவு 36(1) ஓடை மற்றும் வாய்க்கால் செல்வதிலிருந்து 50 மீட்டர் இடைவெளி விட்டு குவாரி பணி செய்ய வேண்டுமென அரசு விதி தெளிவாக கூறப்பட்டுள்ளது. ஆனால் புல எண்.471/1ன் புலத்திலேயே தென்புறத்தில் சொக்கலிங்கபுரம் கருப்பணன் கல்குவாரிக்குள் ஓடை இருப்பதை எந்த அதிகாரிகளின் ஆவணத்திலும் காட்டப்படவில்லை.

கல்குவாரியை சுற்றி 500 மீட்டருக்குள் பல குளங்கள் (நீர் நிலைகள்) அரசின் நீரேற்று நிலையங்கள் ஏரி, குளங்கள், கண்மாய், அணை போன்ற தண்ணீர் தேங்கி நிற்கும் நீர்நிலைகள் இருந்தால், 500 மீட்டர் தூரத்திற்குள் குவாரிகள் அமைக்க கூடாது என்று பல்வேறு நீதிமன்ற உத்தரவுகள் உள்ளன. மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு குழுமம் குறிப்பு விதிமுறைகள் கடிதம் எண். Lr.no.SEIAA/TN/ F.No.9381/SEAC/TOR–1306/2022 நாள். 28/11/2022 என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் குறிப்பு விதிமுறைகள் அடிப்படையில் காற்று, ஒலி, நீர், மண், பல்லுயிர்ச்சூழல் ஆய்வு மார்ச் 1/2022 முதல் மே 31/2022 வரை செய்யப்பட்டதாக அறிக்கையில் (தமிழ் சுருக்க அறிக்கை பக்கம் 2) தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு விதிமுறைகள் 28/11/2022 அன்று கொடுக்கப்பட்டிருக்க, அதற்கு 8 மாதம் முன்பே ஆய்வு பணி செய்யப்பட்டு இருப்பது என்பது மிகப்பெரிய மோசடி ஆகும்.

கல்குவாரிக்கு அனுமதி கோரி 14/06/2023 புதன்கிழமை அன்று நடந்த கருத்து கேட்பு கூட்டத்தில் இணைப்பு என்பதில் 40 வகையான ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டியதில் 10 வகையான ஆவணங்கள் மட்டும் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த கல்குவாரியின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையோடு இணைக்கப்பட வேண்டிய 30 வகையான ஆவணங்கள் இணைக்கப்படவில்லை. இதனால் முழுமையான விபரங்களை அறிந்து கொண்டு கருத்து தெரிவிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

கொட்டம்பட்டியில் அதிகளவில் குவாரிகள் உள்ளதால் இது வறட்சி பகுதியாகும். மக்கள் பயன்பாட்டிற்கு நிறைய திட்டங்கள் உள்ளது. வருங்கால சந்ததிக்கு நல்ல பூமி இடத்தை கொடுக்க வேண்டும். எனவே குவாரிக்கு அனுமதி கொடுக்க கூடாது.

<u>வருவாய் கோட்டாட்சியர், மேலூர்</u>

இத்திட்டம் தொடர்பாக கருத்து கூற வேறு எவரும் முன்வராததால் வருவாய் கோட்டாட்சியர்அவர்கள் இத்திட்டத்திற்கு அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை என்றும் வழங்குவதற்கு முன்பு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது என்றும், விதி மீறல்கள் ஏதும் இருப்பின் கவனத்தில் கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டத்தை முடித்து வைத்தார்

| | |
|---|---|
| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>மதுரை | வருவாய் கோட்டாட்சியர்<br>மேலூர்<br>மதுரை |

இணைப்பு:

1. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள்)

2. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகை பதிவேடு நகல். (மொத்த பக்கம் 12 மற்றும் 91 நபர்கள்)

3, பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு நகல்.

4.திட்டத்தை பற்றி பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள்.